[22nd February 1969

தருமபுரி குடி தண்ணீர் திட்டம்

திரு. என். ஆர். தியாகராஜன் : மாண்புமிகு சுகாதார-அரிஜன நல அமைச்சர் அவர்கள் கீழ்க்கண்ட வினவிற்குப் பதிலளிக்க வேண்டுகிறேன்—

தருமபுரி குடி தண்ணீர் திட்டம் எந்நிலையில் உள்ளது?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : இத்திட்டத்திற் கான புலனாய்வு வேலைகள் நடந்துகொண்டு இருக்கின்றன.

திரு. என். ஆர். தியாகராஜன் : தலைவர் அவர்களே, தர்மபுரி புதிதாக ஒரு மாவட்டத்தின் தலைநகராக ஆக்கப்பட்டது. அதனால் தண்ணீர் தேவை அதிகமாக இருக்கிறது என்று எனக்கு வந்த கடிதத்தில் கூறியிருக்கிறார்கள். ஆகவே சீக்கிரமாக இந்தத் திட்டத்தை நிறைவேற்ற முயற்சி எடுக்கப்படுமா?

மாண்புமிகு திருமதி சத்தியவாணிமுத்து : சீக்கிரம் செய்ய வேண்டுமென்று தான் முயற்சிகள் நடைபெற்று வருகின்றன. இது வரையில் நடைபெற்ற புலனாய்வுகளில் பெண்ணையாறு, காவேரி போன்ற ஆறுகளில் இருமத்தூர் பகுதியில் கிடைக்கும் தண்ணீர் குடிப்பதற்குத் தகுதியற்றதாக பரீட்சைக்குப் பிறகு தெரிந்து அந்தத் திட்டம் கைவிடப்பட்டது. ஜெயலத்தாறு பக்கத்தில் பாலக்கோடு பகுதியில் தண்ணீர் எடுத்தால் 356 ஏக்கர் நஞ்சை நிலத்தை அதற்காக எடுக்கவேண்டியிருப்பதால் அது இப்போ திருக்கிற உணவுத் தட்டுப்பாடுக்கு உகந்ததல்ல என்று அந்தத் திட்டமும் கைவிடப்பட்டது. இப்போது அடுத்து ஒக்க னக்கல் வீழ்ச்சிக்கு அருகில் இருக்கும் காவேரி தண்ணீரை எடுக்கும் முயற்சியிருக்கிறது. சின்னாறு பக்கத்தில் உள்ள தண்ணீரையும் எடுக்க முயற்சிகள் நடைபெறுகின்றன.

Aided Secondary School Teachers

* 23 Q.—Thiru G. KRISHNAMOORTHY (on behalf of Thiru M. Rajah Iyer) : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) whether the Inspectress of Girls' Schools, Tirunelveli has denied the increment due to any teacher, who changed over from one Aided Secondary School to another without any break of service; and

(b) if so, the details thereof?

மாண்புமிகு திரு. எஸ். மாதவன் : (அ) இல்லை.

(இ) இக்கேள்விக்கு இடமில்லை.

Music teachers

* 24 Q.—Thiru G. KRISHNAMOORTHY : Will the Hon. the Minister for Education and Industries be pleased to state—

(a) the number of posts of Music Teachers abolished in Aided Girls' High Schools in Tiruchirappalli Town area from the commencement of the school year 1967–68;